# தமிழர் பழங்குடி மக்களின் ஜவ்வாது மலைவாழ் மக்கள் பெறுமிடம்

# The Significance of the Jawadhu Hills People among the Ancient Tamil Tribal Communities

*முனைவர் ஜோ. சாந்தமூர்த்தி*
உதவிப் பேராசிரியர்
ரங்க பூபதி பொறியியல் மற்றும்
தொழிற்நுட்பக் கல்லூரி
செஞ்சி, தமிழ்நாடு, இந்தியா

**Dr. J. Santhamoorthy**
*Assistant Professor*
*Ranga Bhoopathy Engineering and Technology College*
*Gingee, Tamil Nadu, India*

**Citation**: Santhamoorthy, J. "The Significance of the Jawadhu Hills People among the Ancient Tamil Tribal Communities." *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 3, 2026, pp. 4-9.

*https://doi.org/10.5281/zenodo.19762035*

*ஆய்வுச் சுருக்கம்*

*தமிழ் சிற்றிலக்கியங்களில் பரணி எனும் வகை, போரில் பெற்ற மகத்தான வெற்றியைப் போற்றிப் பாடும் இலக்கிய வடிவமாகும். அந்த வகையில் தலைசிறந்த படைப்பாகத் திகழ்வது கலிங்கத்துப் பரணி. இதனை ஜெயங்கொண்டார் இயற்றினார். இந்நூல் குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டின்மீது நடத்திய படையெடுப்பை மையமாகக் கொண்டு, சோழ அரசியல் ஆதிக்கத்தையும் வீரச் சிறப்பையும் இலக்கியமாக நிலைநிறுத்துகிறது.*

## Abstract

*According to the Tamil Lexicon, the term Savvadu refers to a fragrant substance secreted from a particular type of cat. There exists a species of cat known as the Punugu Cat (civet cat). The fluid secreted from the body of this civet cat is called Savvadu. Some scholars believe that the Jawadhu Hills derived their name from the abundance of these civet cats in the region. Informants also state that these civet cats are still found in the forests today and that their distinctive fragrance can be sensed even when they pass nearby. Another explanation suggests that the hills may have been named Savvadu Malai because of the presence of numerous sandalwood trees in the region.*

***Keywords***: *Tribal Community, 26, Malayali Tribe, Vellore, Tiruvannamalai, Dharmapuri*
***Issue***: *Loss of Land*

**முன்னுரை**

*தமிழக பழங்குடி மக்களில் ஜவ்வாதுமலைவாழ் மக்கள் பெறுமிடமானது ஏணைய பழங்குடிகளை பொல வரலாற்று சிறப்பு வாய்ந்த இடத்தினைப் பெற்றுள்ளது. இங்குள்ள ஜவ்வாதுமலையில் ஆய்வாளர்கள் ஆராயும்பொழுது கல்வெட்டுகளும், செப்பேடுகளும் கண்டுபிடிக்கப்பட்டது. அக்கல்வெட்டில் அம்மலைவாழ் மக்களின் பாரம்பறியமும்,*

*பண்பாட்டையும் செதுக்கியுள்ளன. அவை மட்டும் அல்லாமல் திருமணம் மற்றும் ஏனைய சடங்கு முறைகளை அக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.*

*கள ஆய்வு செய்து பார்த்ததில் எண்ணற்ற கற்களில் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டது. அவற்றில் வீரனின் தோற்றத்தையும், அவன் பயன்படுத்திய ஆயுதங்கள் கையில் கொண்டுள்ளது போலும் கால்களில் வீரக்கல்கள் கொண்டது போலும் இவ்வமைப்புடன் போர் புரிவதுபோல் அச்சிற்பங்கள் அமைப்பானது உள்ளது.*

*இவர்கள் கால அட்டவணைப்படி 25-வது இடத்தில் வைக்கப்பட்டது. அவை பின்வருமாறு,*

*பழங்குடி வரிசை - 26*

*வகைப்பாடு - மலையாளி*

*வசிப்பிடம் - வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி*

*பாரம்பரியத்தொழில் - விவசாயிகள்*

*வாழ்வியல் சிக்கல் - நிலம் இழப்பு*

*ஜவ்வாது மலையில் பல செய்திகள் வெளிப்பட்டாலும் கல்வி சார்ந்த செய்திகள் இருப்பினும் இலக்கியங்களிலும் ஜவ்வாது மலை சிறப்ப பெற்றுள்ளன.*

**சவ்வாது மலையின் சிறப்புக் கூறு**

*செவ்வாது மலை கிழக்கு தொடர்ச்சி மலை கொல்லி மலை, சேர்வராயன் மலை கல்வராயன் மலையை அடுத்து வரும் மலைத்தொடர் ஆகும். இம்மலைத்தொடர் வேலூர் - திருவண்ணாமலை மாவட்டத்தில் 262 ச.கி.மீ. பரப்பில் அமைந்துள்ளது. இம்மலை தொடரில் சராசரி உயரம் 1080 மீட்டர். 2011ஆம் ஆண்டு மக்கள் தொலை கணக்கெடுப்பின்படி இம்மலையின் மக்கள் தொகை (51999) இதில் பழங்குடியினரின் மக்கள் தொகை 47,087. 1000 ஆண்களுக்கு 96 பெண்கள் உள்ளனர். சவ்வாது மலைக்குக் கிழக்கே போளூரும் மேற்கே திருப்பத்தூரும் வடக்கே ஆலங்காயமும் தெற்கே செங்கமும் அமைந்துள்ளது. சவ்வாது மலையில் 279 கிராமங்கள் உள்ளன. இம்மலையில் 11 ஊராட்சிகள் உள்ளன.*

*இம்மலையில் வெப்பநிலை கோடைக் காலத்தில் 33 செ.கி. ஆகவும் உள்ளது. வசந்த காலத்தில்12 செல்சியஸ் ஆகவும் உள்ளது. மலையளவு 35 - 50 செ.மீ ஆகவும் உள்ளது. இம்மலையின் குறைந்த மழைப்பொழிவாக நவம்பர் மாதம் 5 மி.மீ ஆகவும் அதிகமான மழைப்பொழிவாக டிசம்வர் மாதம் 107 மி.மீ ஆகவும் 2016-2017ல் பதிவாகியுள்ளது. இம்மலையின் மண் வகை சிவப்புக் களிமண்74. ஒன்றியப் பகுதியில் வரும் பாராளுமன்ற தொகுதி திருவண்ணாமலை ஆகும். ஒன்றியப் பகுதியில் வரும் சட்டமன்ற தொகுதிழகள் கலசப்பாக்கம் மற்றும் செங்கம் ஆகும்.*

**மலையாளிகளின் தோற்றத் தொன்மம்**

*பெரும்பாலான மலையாளிகள் தங்களைக் காஞ்சிபுரத்திலிருந்து குடியேறியவர்கள் என்று கூறுகின்றனர். அவர்கள் தங்களை வெள்ளாளர் எனக் கூறுகின்றனர். வடஆற்காடு மாவட்ட மலையாளிகள் தங்களைக் காரைக்காட்டு வெள்ளாளர் என்கின்றனர். தென் ஆற்காடு மாவட்ட மலையாளிகள் தங்களைக் காரால வெள்ளாளர் எனவும் மேலும் சிலர் தங்களைக் காஞ்சி மண்டல வேளாளர் எனவும். அழைக்கின்றனர். இவர்கள் வேளாளர் என்பதை முதன்மைப் பெயராகவும், கவுண்டர். என்பதை இரண்டாவது பெயராகவும் கொண்டிருக்கின்றனர்.*

*மலையாளிகள் காஞ்சிபுரத்திலிருந்து தென்னிந்தியாவில் முகம்மதியர் ஆட்சி மேலோங்கிய போது பத்துத் தலைமுறைகளுக்கு முன் மலைப்பகுதிகளில் குடியேறியவர்கள். காஞ்சியினை விட்டுப் புறப்பட்ட இவர்கள் முன்னோர்கள் மூன்று உடன்பிறந்தவர்களைத் தங்களுடன் அழைத்து வந்தனர். அம்மூவருள் மூத்தவன்சேர்வராயன் மலையிலும், இரண்டாமவன் கொல்லி மலையிலும், இளையவன் பச்சை மலையிலும் தங்கினர். என்னும் இக்கதை சேலம் மாவட்டக் கையேட்டில் திரு எச். லே.பனு அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளதாக எட்கர் தர்ஸ்டன் கூறுகிறார்.*

*வட ஆற்காட்டு மாவட்டக் கையேட்டில் மலையாளிகள். காஞ்சிபுரத்திலிருந்து, மலைபகுதிக்கு எவ்வாறு வந்தனர் என்பதற்கான செவிவழிச் செய்தியைப் பதிவுசெய்கிறது. சக. 1055 இல் (கி.பி. 1132) கங்குண்டியினைச் சேர்ந்த வேடர்கள் காஞ்சிபுரத்தைச் சே ர்ந்த கார்காத்த வேளாளரிடம் தங்களுக்குப் பெண் தரும்படி வேண்டினர். அதற்கு அவர்கள் மறுக்கவே கோபம் கொண்ட வேடர்கள் ஏழு வேளாளப் பெண்களைக் கங்குண்டிக்குத் தூக்கிச் சென்று விட்டனர். அவர்களை மீட்டுவர வேளாளர் எழுவர் ஏழு நாய்களுடன் புறப்பட்டனர். புறப்படும்முன் அவர்கள் தங்கள் மனைவியரிடம் நாய்கள் மட்டும் தனியே திரும்பி வருமானால் தாங்கள் இறந்துவிட்டதாகக் கருதித் தங்களுக்குச் சாவுச் சடங்குகள் நடத்தும்படி கூறிச் செ ன்றனர். பாலாற்றினை அடைந்த அவர்கள் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடக் கண்டனர். மிகுந்த தொல்லைக்கு உள்ளான அவர்கள் அதனைக் கடந்தனர். அவர்கள் உடன்சென்ற நாய்கள் ஆற்றில் பாதிவழி நீந்திய பின் காஞ்சிபுரத்திறகே திரும்பி வந்துவிட்டன. எனினும் தொடர்ந்து அவர்கள் பயணத்தை மேற்கொண்டனர். தங்கள் பெண்களைக் கவர்ந்து சென்ற வேடரைக் கொன்று தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிய இவர்கள், தாங்கள் இறந்துவிட்டதாகக் கருதி இவர்களின் மனைவியர் விதவைக் கோலம் பூண்டவர்களாகச் சாவுச் சடங்குகளையும் நிகழ்த்திவிட்டிருந்த காரணத்தால் தாங்கள் சாதியிலிருந்து விலக்கப்பட்டவர்களாக ஆகிவிட்டதை உனர்ந்தளர்.*

*இச்சூழலில் இவர்கள் வேடர் சாதிப் பெண்களை மணந்தவர்களாகச் சவ்வாது மலையில் குடியேறிப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டவர்களாக மலையாளிகளின் மூதாதையார்களாகிவிட்டனர். இந்த விவரங்கள் மலையாளிகளிடம் உள்ள ஒரு பனையோலை ஏட்டில் கூறப்பட்டுள்ளது. இந்த எழுத்துக்கள் அழிந்துவிட்டமையால் அவை யாராலும் படித்தறிய இயலாத வண்ணம் உள்ளன. சென்ற கணக்கெடுப்பின் போது மலையாளிகள் தங்களைக் கார்காத்த வேளாளர் எனப் பதிந்துள்ளனர்.*

**இலக்கியங்களில் ஜவ்வாதுமலை**

*சங்க இலக்கியங்களில் வரம் 'நன்னன்' என்பவனது நாடு தற்பொழுது ஜவ்வாது மலை என அழைக்கப்படுகிறது. நன்னனது நாடு தொண்டை நாட்டைச் சேர்ந்தது. அம்மலையின் தெற்கில் உள்ள செங்கம் என்னும் ஊரே நன்னன் காலத்தில் செங்கண்மா எனப்பட்டது. அது நன்னன் காலத்தில் பெரிய நகரமாயிருந்தது. குளிர்ந்த நெடிய பொழில்களைக் கொண்டது. மக்கள் போவதும் வருவதுமான சிறந்த பெரிய கடைத்தெருக்களை உடையது.*

*மலைபடுகடாம், பெரும்பாணாற்றுப்படை போன்ற நூல்கள் நன்னனது மலைநாட்டைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. கடுக்காய் மரங்கள் ஜவ்வாது மலையில் நிறைந்திருக்கும் பாறைகளின் சமைதளம் படுத்திக் கிடப்பது போலவும் நெறிகளின் உயர்ச்சி எடத்து நிறுத்திய பாதை போலவும் விளங்குகின்றன (மலை. 15-17) என மலையின் பாதை குறித்தச் செய்தியை மலைபடுகடாம் பதிவு செய்கிறது. மேலும் நன்னனது மலையில்,*

*எறித் தருஉம் இலங்குமலைத் தாரமொடு*
*வேய்ப் பெயல் விளையும் தேக்கட் தேறல் (மலை. 170-173)*

*உண்பதற்குக் கடமானின் இறைச்சியும் முள்ளம் பன்றியைக் கொன்று பிரிக்கப்பட்ட தசையும், தேனும், பலாவும், கிட்டும் என்னும் செய்தியும் மலைபடுகடாமில் இடம் பெற்றிருக்கிறது. இம்மலையில் வேடுவர்கள் வாழ்ந்து வந்தனர் என்பதும் பின்வரும் பின்வரும் பாடல் மூலம் அறியமுடிகிறது.*

**கூப்பீடு கடக்கும் கூர்நல் அம்பின்**
**கொடுவிற் கூளியர் சுவை காணின்**

*கூப்பிடும் எல்லையைக் கடந்த நிற்கும் எல்லையில் வாழும் கூரிய நல்ல அம்பினையும், கொடிய வில்லிகளையும் உடைய வேடர் கூட்டத்தைக் காண்பிராயின், தசைகளையும் கிழங்குகளையும் தந்து அவர்கள் தங்களை உபசரிப்பாளர்கள் என வேடர்களின் வாழ்க்கையை மலைபடுகடாம் பதிவு செய்கிறது. இவை ஆய்வின் மூலமாக இலக்கியங்களில் ஜவ்வாதுமலை பெறுமிடமாகும்.*

**இலக்கியத்தின்வழி தண்டனைகள்**

*சங்க இலக்கியத்தில் குற்றங்களை இழைத்தோர்க்கு வழங்கப்பட்ட தண்டனைகளைக் குறித்துப் பதிவுகள் காணப்படுகின்றன. பொதுவாகக் குற்றங்களுக்குச் சிரச்சேதம், குற்றம் செய்த உறுப்புகளைக் குறைத்தல், சித்திரவதை, சிறை இருத்தல், அபராதம் போன்றவை தண்டனைகளாக வழங்கப்பட்டன காராளரிடையே தண்டனை என்பது தற்போது தண்டத்தொகையாக வழங்கப்படுகிறது. முன்பெல்லாம் குற்றம் செய்தவரைக் குனிய வைத்து அவரது முதுகில் கல் இருக்கும் கூடையை வைத்து ஊரை மூன்று முறை சுற்றி வரச் செய்துள்ளனர். கணிகையர் தம் தொழிலில் தவறு செய்த போது அத்தகையோரைத் தலையில் ஏழுசெங்கற்களைச் சுமந்து கொண்டு சுற்றிவரச் செய்த நிகழ்வை நாலடியார் கூறுகிறது. (நாலடி.84) மேலும் குற்றவாளிகளை மொட்டை அடித்துக் கரும்புள்ளி, செம்புள்ளி குற்றி ஊர்வலம் வரச் செய்துள்ளனர். புளியவிளாரால் விலாசும் தண்டனையும் அக்காலத்தில் வழக்கில் இருந்தது என்பதை எட்கர் தர்ஸ்டனும் பதிவு செய்துள்ளார். இவர்கள் தண்டத்தொகையைத் தப்பு என்கின்றனர்.*

*ஒரு பெண்ணைக் காதலித்து ஏமாற்றி விடும் ஆணை அவனது குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட நிலையில் அவனை நையப்புடைந்து அவன் தலைமீது சாணம் இறைத்து ஒறுப்பது மரபு. இந்நிகழ்வு காராளரிடையேயும் முன்பு வழங்கப்பட்டதாகவும் தற்போது தண்டத்தொகை மட்டுமே விதிக்கப்படுவதாகவும் தகவலாளர்கள் தெரிவித்தனர்.*

**வாழ்வாதாரம்**

*அவர்களின் முக்கிய வாழ்வாதாரமாக தேன், மிளகு, பழங்கள் போன்றவை உள்ளன. கலாச்சாரம் மற்றும் வரலாறு இந்த மக்கள் பழங்கால நினைவுச் சின்னங்களை பாதுகாத்து வருகின்றனர். இங்கு மலையாளப் பழங்குடியினரின் வாழ்வியல் சடங்கு நிகழ்வுகள் மற்றும் பண்பாட்டு மாற்றங்கள் பற்றிய ஆய்வுகளும் நடைபெறுகின்றன.*

*தமிழகத்திலுள்ள பழங்குடிகளின் தொன்மைகளை முன்வைத்து இவர்களை மூன்று வகையினராக வகைப்படுத்தலாம்.*

1. *முதலாவது பல நூற்றாண்டுகளுக்கு முன் சமவெளிகளிலிருந்து மலைப்பகுதிகளுக்குக் குடியேறிய பழங்குடிகள்.*

2. சமவெளிகளிலிருந்து குடியேறாமல் நீண்ட நெடுங்காலமாகவே தத்தம் பகுதிகளில் மண்ணின் மைந்தனாக வாழும் குடிகள் என்று இவ்வாய்வின் மூலமாக உணர்த்தப்படுகிறது.
3. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இத்துணைக் கண்டத்தின் இனக்கூறுகளைக் கண்டத்தின் இனக்கூறுகளைத் தனித்துவமாகக் கொண்டிருக்கும் தொல்குடிகள் என இவ்வாய்வில் வெளிப்படுத்தப்பட்டன.

இதில் முதலாவது வகையில் மலையாளிப் பழங்குடி மக்களைப் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது. ஏனெனில் இவர்களின் வாய்மொழி வழக்காறு இவர்களின் இடப்பெயர்வு வரலாற்றை உறதி செய்வதாக உள்ளது. அதாவது வெகு காலத்திற்கு முன்பு தாங்கள் காஞ்சிபுரத்தில் இருந்து ஜவ்வாது மலைக்குக் குடியேறியவர்கள் என்று கூறுகின்ற செய்திகள் இவ்வாய்வின் மூலமாக வெளிப்படும் செய்தியாகும்.

**சவ்வாதுமலை ஊர்ப்பெயர்களின் பொதுக்கூறுகள்**

சவ்வாது மலை, பில் காடு, மலை, ஊர், காலனி, குப்பம், நகர், பட்டு, மேடு, வலசை, கொல்லை, வெளி முதலான விகுதி பெற்ற ஊர்கள் உள்ளன. ‘‘காடு’’ முல்லை நிலத்துப் பகுதி என்கிறது தொல்காப்பியம். (அகத். நூற்.6) ஆயினும் காட்டு விலங்குகளின் இருப்பிடமாகவே இப்பகுதி உள்ளது. சவ்வாது மலையில் சீங்காடு, வாழக்காடு என்ற ஊர்கள் காடு என்ற விகுதியைக் கொண்டுள்ளன. சுற்றுப்புற பகுதிகளிலிருந்து சற்று உ.பர்ந்திருக்கும் நிலப்பகுதி ‘‘மலை’’ என வழங்கப்படுகிறது. இப்பகுதியில் மலை என்ற விகுதி பெற்ற கானமலை, நாச்ச மலை, பெருமலை முதலான மூன்று ஊர்கள் உள்ளன.

‘‘ஊர்’’ என்னும் பெயர் மருத நிலத்தைச் சார்ந்த குடியிருப்புகளைக் குறிக்கீறது. சவ்வாது மலை.பில் (6 ஊராட்சிகளில்) ஊர் என்ற விகுதி பெற்ற 73 ஊர்கள் உள்ளன. கோவிலூர், குண்டாலத்தூர், ஜமுனாமரத்தூர், பாக்கு முடையானூர், எட்டி மரத்தூர், பலா மரத்தூர், தோப்பூர், வீரப்பனூர் என்பன அவற்றுள் சில.

‘‘குடியிருப்பு’’ என்று பொருள்படும் அங்கிலச் சொல் காலனி அகும். இவ்வடிவம் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகத் தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது. ஊரையநுத்து ஏற்படும் குடியிருப்புகள் காலனி என வழங்கப்படுகின்றன. சவ்வாது மலை.பில் காலனி என்ற விகுதி பெற்ற 3 ஊர்கள் உள்ளன. அவையாவன : ரெட்டிக்கொல்லை இருளர்காலனி, கொண்டத்தூர் ஆர்.காலனி, ஜமுனாமரத்தூர் காலனி ஆகியவையாகும். மக்கள் கூட்டமாகச் சேர்ந்து வாழுமீடம் ‘‘குப்பம்’’. சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் வாழுமிடமாகக் குப்பம் அமைந்துள்ளது. சவ்வாதுமலையில் புளியங்குப்பம், கீழ்சரணங்குப்பம், தாதன் குப்பம், நடுசாரன் குப்பம், சின்ன தாதன் குப்பம், மேல் சாரணங்குப்பம், விளாங்குப்பம் முதலான 7 ஊர்கள் குப்பம் என்ற விகுதியைக் கொண்டு அமைகின்றன.

‘‘பட்டு’’ என்ற சொல் குக்கிராமம் என்று பொருள் படும். சவ்வாது மலையில் பட்டு என்ற விகுதிபெற்று 16 ஊர்கள் உள்ளன. அவை, பாலபிரயம் பட்டு, சாத்தன் பட்டு, நீர்ப்பளாம் பட்டு, காலம்பட்டு முதலாகத் தொடங்கி, புதுப்பட்டு போன்ற ஊர் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

*தாரவரங்கள் ஒட்டிய ஊர்ப்பெயர்கள்*

தாவரங்கள் மிகுதி அல்லது அருமை என்னும் காரணங்களால் தாவரப் பெயர்கள் ஊர்ப் பெயர்களின் பொதுக்கூறுகளாக அமைந்திருக்கின்றன. இதில் தாவரப்பெயர் சினைப்பெயர், மரபுப்பெயர் அனைத்தும் அடங்கும். சவ்வாது மலையில் இலந்தம்பட்டு, அத்திப்பட்டு, செ ன்பகத்தோப்பு, புளியங்குப்பம், விளாங்குப்பம், வாசக்காடு, கீழ் முருங்கை, மந்தை, மேல் முருங்கை, மந்தை, நாகலூர், விலாமரத்தூர், பலாக்கானூர், பனைமரத்தூர், நார்த்த மரத்தூர், எட்டிமரத்தூர், பூவரசன் கோட்டை, அலமரத்துக் கோட்டை, பாக்குமுடையனூர், தியிரி மரத்தூர் முதலான 17 ஊர்கள் மரத்தைச் சுட்டுகின்றன.

*நீர்த்தும்பை, வாழத்தும்பை, தும்பக் கொல்லை ஆகிய ஊர்கள் செடியைச் சுட்டுகின்றன. மேலும் புளிச்சக் குட்டை என்றும் ஊர் வகையை சுட்டுகிறது.*

*பயிர் விளைவிடங்களை ஒட்டிய ஊர்ப்பெயர்கள்*

*வயல்களின் ஒடுவே வீடு கட்டி வேளாண்மை செய்யும் வழக்கத்தினால் பயிர் விளைவிடங்களைக் குறிப்பிடும் சொற்கள் ஊர்ப்பெயர்களாக மாற்றம் கொண்டன. சென்பத் தோப்பு, கீழ் சென்பகத் தோப்பு, வேடந் தோப்பு, புசாரித் தோப்பு முதலான நான்கு ஊர்கள் தொப்பு என்னும் மிகுதியைக் கொண்டுள்ளன.*

**முடிவுரை**

*தமிழர் பழங்குடி மக்களின் ஜவ்வாதுமலை பெறுமிடத்தை மானிடவியலில் உற்றுநோக்கும் பொழுது ஜவ்வாது மலை அதன் பழங்குடி மக்களான மலையாளிகளின் (மலை+யாளி) பாரம்பரிய வாழ்வியல், பழங்கால வரலாற்று தடயங்கள், பெருங்கற்கால ஈமச்சின்னங்கள், நடுகற்கள், வளமான இயற்கை (சந்தனம் நறுமணப் பொருட்கள்), நீ ர்விழ்ச்சிகள் (பீமனாடு மற்றும் வானியல் ஆய்வு மையம்), காவலூர் ஆகியவற்றால் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. இது இயற்கை அழகுடன் பழங்குடி மக்களின் வாழ்வியல் முறைகள், திருவிழாக்கள், நாட்டுப்புற கலைகள் மூலம் தத்துவமான பாரம்பரியத்தை வெளிப்படுத்துகிறது என்பதும் இவ்வாய்வுக் கட்டுரையில் வெளியான முடிவுரையாகும்.*

**துணைநின்ற நூல்கள்**


1. வட்டார வளர்ச்சி அலுவலகம், ஜமுனா மரத்தூர் மலை, பக். 174-176.
2. A Comparehensive Tamil & English Dictionary, Asian Education Service.
3. சீ. பக்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், ப. 439.
4. டாக்டர் டா.பீ. நசீம்தீன், இடுக்கி மாவட்ட பழங்குடி மக்களின் வழக்காற்றியல், ப. 10.
5. ரூத் பெனிடிக்ட், சுப்பிரமணியன் (மொ.பெ.ஆ.) பண்பாட்டுக் கோலங்கள், ப. 6.
6. ரூத் பெணிடிக்ட், மு.நூ. ப. 19.
7. கு.வெ. பாலசுப்பிரமணியன் உரையாசிரியர், பத்துப்பாட்டு, ப. 417.
8. மலைபடுகடாம், பா. 421-427.
9. தமிழ் லெக்சிகன், சென்னைப் பல்கலைக்கழகம், ப. 1331.
10. சீ. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப. 63.
11. டா.ந. சுப்ரமணியன், சங்க கால வாழ்வியல், ப. 254.


**References**


1. Block Development Office, Jamunamarathur Hills, pp. 174–176.
2. A Comprehensive Tamil–English Dictionary, Asian Education Service.
3. C. Bhaktavatsala Bharathi, Anthropological Theories, p. 439.
4. Dr. Ta. P. Naseemudeen, Folklore of the Tribal Communities of Idukki District, p. 10.
5. Ruth Benedict; Subramanian (Trans.), Patterns of Culture, p. 6.
6. Ruth Benedict, op. cit., p. 19.
7. Ku. Ve. Balasubramanian (Commentator), Pathuppattu, p. 417.
8. Malaipadukadam, lines 421–427.
9. Tamil Lexicon, University of Madras, p. 1331.
10. C. Bhaktavatsala Bharathi, Cultural Anthropology, p. 63.
11. Dr. N. Subramanian, Life in the Sangam Age, p. 254.